**கிழக்கு மாகாண சபை 2017**

---

கிழக்கு மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கிழக்கு மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளளூராட்சி நிறுவனங்கள் சார்பாக மீளாய்வாண்டின் போது மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 460,280,477 கூட்டுமொத்தமான முத்திரைத் தீர்வைகளும் நிதிமன்ற தண்டப் பணங்களும் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக காட்டப்படுவதற்கு பதிலாக வருமானமாகக் காட்டப்பட்டிருந்தன. இதன் விளைவாக அதே தொகையால் பொறுப்புக்களை குறைத்துக் காட்டுவதன் மூலம் மீளாய்வாண்டிற்கான மிகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபைக்கு எதிராக மூன்றாம் தரப்பினர்களால் தொடுக்கப்பட்ட 41 நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை மாகாண சபை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் 2004 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிக்காக புகையிரதத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய புகையிரத ஆணைச்சீட்டுக்கள் தொடர்பான ரூபா 44,964,782 கூட்டுமொத்தமான தொகைகள் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டியவைகள் புகையிரதத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் போதாதமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மாகாண சபையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 7,056,523,854 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களிலுள்ள கணக்கீட்டுத் தொகைகளிற்கு ஆதாரமாகவும் அவற்றை சரிபார்ப்பதற்கும் முறையான பதிவேடுகள் மற்றும் துணைப் பேரேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள பின்வரும் ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (எவ்ஆர்)** | |
| (i) எவ்ஆர் – 138 | மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்கான ரூபா 1,905,703 கூட்டுமொத்தமான 86 உறுதிச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகள் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் சான்றுறுதிப்படுத்தல்கள் இல்லாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) எவ்ஆர் – 237(ஆ) | திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் என்பன கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்ளாமல் முறையே ரூபா 1,150,000 மற்றும் ரூபா 725,100 தொகைகளை செலுத்தியிருந்தன. |
| (iii) எவ்ஆர் – 396 | திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 2016 ஆகஸ்ட் தொடக்கம் 2017 மே வரை வழங்குநர்களின் பெயரில் வரையப்பட்டு வழங்கப்பட்ட ரூபா 3,532,986 தொகையான இரண்டு காசோலைகள் 2018 யூன் 30 வரையிலும் காசாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) எவ்ஆர் – 571 | ஒரு அமைச்சு மற்றும் 06 திணைக்களங்கள் தொடர்பாக 02 ஆண்டுகளுக்கு மேலாக காணப்பட்ட ரூபா 16,052,213 கூட்டுத் தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(v) எவ்ஆர் – 756

432 மாகாணப் பாடசாலைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2018 யூன் 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கிழக்கு மாகாணத்தின் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் (பிஎவ்ஆர்)**

---------------------------------------------------

(i) பிஎவ்ஆர் 215

கட்டுநிதியின் பயன்படுத்தப்படாத மீதியானது அடுத்த நிதி ஆண்டின் முதலாவது வேலை நாளில் மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 02 மாகாணத் திணைக்களங்களின் ரூபா 18,907,219 கூட்டுத் தொகையான கட்டுநிதி மீதி 2018 யூன் 30 ஆம் திகதி வரையிலும் மாகாணத் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பிஎவ்ஆர் 326.2

2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மாகாண சபையின் திரண்ட நிலையான சொத்துக்கள் பயன்பாட்டுக் கூற்று 2018 ஏப்ரல் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இக் கூற்று மாகாண சபையினால் 2018 யூன் 30 வரையிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 10(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள்

கிண்ணியா, மட்டக்களப்பு மத்தி மற்றும் கல்முனை கல்வி வலயங்களிலுள்ள 181 ஆசிரியர்களிற்கு 02 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதிகாக வருடாந்த சம்பள ஏற்றங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. வருமான முகாமைத்துவம்**

கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் முன்னைய 04 ஆண்டுகளின் போதும் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் கீழே தரப்படுகின்றது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக (ரூபா. மில்லியன்)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2016** | **2015** | **2014** | **2013** |
| வரி வருமானம் | 3,178 | 2,896 | 2,347 | 2,181 | 1,860 |
| வரியற்ற வருமானம் | 446 | 421 | 358 | 320 | 288 |
| **மொத்தம்** | **3,624** | **3,317** | **2,705** | **2,501** | **2,148** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம், நானாவிதங்களிலிருந்தான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 7,000,000 தொகையாக காணப்பட்ட போதிலும் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 04 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 281,437 தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் மற்றும் ஆதனங்களின் மாற்றங்கள் தொடர்பாக விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகள் தொடர்பாக மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட ரூபா 311,351,736 தொகை உள்ளூராட்சி சபைகளிற்கு அனுப்பப்படாமல் 2018 யூன் 30 வரை மாகாண சபையின் சேமிப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற நாற்பத்தைந்து உள்ளூராட்சி சபைகளால் வீதங்கள், வாடகைகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் குத்தகைகள் போன்ற பிரதான வருமான மூலங்களிலிருந்து 2018 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 466,231,688 கூட்டுமொத்தமான வருமான நிலுவைகள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரசாங்க ஆதனங்கள் மீதான ரூபா 8,104,020 தொகையான ஆதன மதிப்பீட்டு வரி 7 ஆண்டுகளிற்கு மேலாக

நிலுவையாக காணப்பட்ட போதிலும் திருகோணமலை நகர சபையால் இதனை அறவீடு செய்வதற்கு 2018 யூன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 09 பிரதேச செயலகங்கள் தொடர்பான அரசாங்க காணிகளுக்கான ரூபா 273,080,657 கூட்டுமொத்தமான குத்தகை வருமானம் 1991 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 30 வரை உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கிழக்கு மாகாண சபையின் 2008 இன் 1 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான ஏதாவதொரு நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் மாகாண நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2010 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியின் போது பிரதம செயலாளர் செயலகத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களால் வருமானத்தின் வெவ்வேறு மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 5,640,753 கூட்டுத் தொகையான அத்தகைய வருமானம் மாகாண நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படாது மாகாண திறைசேரியின் நானாவித வைப்பு கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(எ) மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்டு 30 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற அடகு பிடித்தல் நிலையங்களைப் பதிவுசெய்து அது தொடர்பான வருடாந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வகையில் ஒரு நிதியச்சட்டம் சட்டமாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக குறிப்பிடதக்களவு தொகையான வருமானம் மாகாண சபையால் இழக்கப்பட்டிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

---

### 4.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,613,477,971 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 2,434,433,298 மிகையை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 820,955,327 முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முத்திரைத் தீர்வை சேகரிப்பு ரூபா 440,508,699 ஆல் அதிகரித்தமையானது முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### மொத்த செலவினத்திற்கு எதிராக மீண்டெழும் செலவினம்

மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 23,209 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 22,052 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன் இது மொத்த செலவினத்தில் 95 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில் ரூபா 17,794 மில்லியன் தொகை ஆளணி வேதனங்களிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் இது மொத்த மீண்டுடெழும் செலவினத்தில் 81 சதவிதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 16,292 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் இது அந்த ஆண்டிற்கான மொத்த செலவினத்தில் 80 சதவிதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு மீளாய்வு

### 4.3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கிழக்கு மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டின் போது 13 வினைத்திறமை காண் தடைப் (ஈபீ) பரீட்சைகளை ஆணைக்குழு நடாத்த வேண்டிய போதிலும் 05 ஈபீ பரீட்சைகள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) மாகாண வீடமைப்பு அதிகாரசபையினால் 2015–2019 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வீடற்ற குடும்பங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,937 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 6,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 66 பயனாளிகளுக்கு ரூபா 7,380,000 வீடமைப்பு உதவிகள் மற்றும் காரணிகளின் அடிப்படையிலான மானியத்தின் கீழ் 118 பயனாளிகளிற்கு ரூபா 5,300,956 பெறுமதியான கட்டிட

மூலப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டமை தவிர ஆண்டின் போது வீடுகள் எதுவும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள எழுபத்து நான்கு ஆசிரியர்கள் 2014 ஒக்தோபர் 23 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு முரணாக 04 ஆண்டுகள் தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் அவர்களுடைய சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உரிய அதிகாரிகளால் அவர்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனக் காப்புறுதி மற்றும் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் என்பன இல்லாமல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வாகனமொன்று 2017 யூன் 04 இல் விபத்திற்குள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், காப்புறுதி மற்றும் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளத் தவறியமைக்கான பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்காக விசாரணைகள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2018 யூன் 30 வரையிலும் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தனியார் திருத்துமிடத்தில் (garage) விளைவற்றிருந்தது.

(இ) கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பதிவகத்தில் காணிகளை பதிவு செய்வதிலிருந்து முத்திரைத் தீர்வையை சேகரிப்பது தொடர்பாக மாகாண வருமானத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் பிரகாரம், 93 காணி உரிமையாளர்கள் முத்திரைத் தீர்வையாக குறைந்த தொகையை செலுத்துவதற்காக அவர்களின் காணிகளிற்கான பெறுமதியை குறைவாக வெளிப்படுத்தியிருந்தனர். ஆகையால், ரூபா 5,877,568 கூட்டுத் தொகையான மேலதிக முத்திரைத் தீர்வை அவ்வாறு குறைத்துப் பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிற்காக விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாண வருமானத் திணைக்களம் காணி உரிமையாளர்களிடமிருந்து அவ்வாறு விதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட மேலதிக முத்திரைத் தீர்வைகளை அறவிடுவதற்கு 2018 யூன் 30 வரையிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) காணிகள் குறைவாகப் பெறுமதியிடப்பட்டதன் காரணமாக மேலதிக முத்திரை தீர்வையை சரிபார்த்து விதிப்பதற்காக 2012 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒன்பதாயிரத்து எண்ணூற்றி பதினெட்டு உரித்துறுதிகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 7(2)(இ) பிரிவின் பிரகாரம் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரும் அவரது பதவிக்காக கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு சபையின் தலைவர் மாத்திரமே உரித்துடையவராவர். எவ்வாறாயினும், 2017 செப்தெம்பர் 30 இல் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரும் கூட 2017 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களிற்காக தலைவரின் தனிப்பட்ட பதவியணியினர்களிற்கு ரூபா 1,045,112 தொகையை மாகாண சபை செலுத்தியிருந்தது. இதன் விளைவாக ரூபா 1,045,112 தொகை சபையால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்புக்கள் பொதுச் சேவைகள் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நியமனம் செய்யப்பட்ட காத்தான்குடி மற்றும் ஏறாவூர் நகர சபைகளின் முறையே 77 மற்றும் 73 ஊழியர்கள் தொடர்பான அத்தகைய பங்களிப்புக்கள் அவர்களது சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 1,595,036 கூட்டுத்தொகையான 09 மாகாண திணைக்களங்களின் பதவியணியினர் கடன் மீதிகள் 2 ஆண்டுகள் தொடக்கம் 13 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறிவிடப்படாதிருந்தன. எவ்வாறாயினும், இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா 195,000,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 74,752,383 தொகை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மட்டக்களப்பு மாநகர சபைக்கான பொது நூலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 4 ஆண்டுகளிற்கு மேலாக நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை சபை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, நூலக வசதிகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்படாததுடன் மிகுதி வேலைகளை

பூர்த்தி செய்வதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 195,000,000 தொடக்கம் ரூபா 207,000,000 வரை 06 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டும் இருந்தது.

(ஐ) 1992 இல் காத்தான்குடி நகர சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 600,000 பெறுமதியான நான்கு சில்லு உழவு இயந்திரமொன்று 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த உழவு இயந்திரத்தை திருத்தம் செய்வதற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 315,203 கூட்டுமொத்தத் தொகையை சபை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நிபந்தனைகளை கருத்தில் கொள்ளாமல் 2016 யூலை 02 இல் சபைச் செயலாளரால் இது ரூபா 16,150 இற்கே ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஒ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஏற்கனவே 49 உத்தியோகத்தர்களால் மிகையாக காணப்பட்ட போதிலும் காத்தான்குடி மற்றும் ஏறாவூர் நகர சபைகள் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்த அடிப்படையில் 150 ஊழியர்களை நியமனம் செய்திருந்தன. மேலும், மாகாண சபையால் பேணப்படுகின்ற நூலகங்கள் மற்றும் வாசிப்பு அறைகள் என்பவற்றிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 14 ஆகக் காணப்பட்ட போதிலும் 28 அமைய ஊழியர்கள் உள்ளடங்கலாக 58 ஊழியர்கள் அந்த ஐந்து நூலகங்கள் மற்றும் நான்கு வாசிப்பு அறைகள் என்பவற்றிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஓ) அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கணனி வள நிலையம் கணனிகள் காலங்கடந்ததன் காரணமாக 2015 ஒக்தோபர் 01 இலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிலையத்திலிருந்து ஐரீ கற்கைநெறிகள் மற்றும் பயிற்சி வசதிகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை இழந்திருந்ததுடன் இந்த நிலையம் செயற்படாததன் காரணமாக 02 ஆண்டுகளிற்கு மேலாக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் விளைவற்றிருந்தன.

(ஔ) திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான காணிகளை தனியார் துறைக்கு கையளிப்பதற்கான அதிகாரத்தை தலைவர் கொண்டிருக்காத போதிலும் 2008 ஆம் ஆண்டில் சபையின் முன்னாள் செயலாளரினால் சபைக்குச் சொந்தமான 3,212 பேர்ச்கள் பரப்பளவான காணிகள் 576 நபர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(க) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் காரைதீவில் உள்ள பாடசாலையொன்றின் தொழில்நுட்பவியல் கட்டிடத்திற்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நாற்பத்தியிரண்டு கணனிகளில் 08 கணனிகள் முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் மிகுதிக் கணனிகள் கடல் காற்று வெளிப்படுவதன் காரணமாக பகுதியளவில் சேதமடைந்திருந்ததுடன் இந்தக் கட்டிடம் கடலிலிருந்து 208 மீற்றர்கள் தூரத்தில் அமைந்துள்ளது.

(கா) 2016 மார்ச் 15 இல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான வாகனமொன்று தொடர்பாக ரூபா 1,500,000 காப்புறுதிக் கோரிக்கையை மாகாண திறைசேரி பெற்றிருந்தது. எவ்வாறாயினும், இந்த தொகை மேற்படி வாகனத்தை திருத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்படாமல் 2017 திசெம்பர் 11 இல் மாகாண வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2016 மார்ச் 15 இலிருந்து வாகனம் விளைவற்றிருந்தது.

(கி) 06 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில், 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் 08 ஆண்டுகளிற்கு மேலாக செயற்பாட்டில் இருக்கவில்லை. எவ்வாறாயினும், மாகாண நிதி ஒழுங்குவிதி 286 இன் பிரகாரம் அந்த 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்தோபர் 23 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்க இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் I(அ) இன் நியமனங்களிற்கான ஏனைய தகைமைகளிற்கு மேலதிகமாக நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் பொது அறிவுப் பாடநெறிகள் இரண்டிலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளை பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் (பிபிஎஸ்சீ) நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் 40 புள்ளிகளை விடக் கூடுதலான புள்ளிகளை

பெற்றுக்கொள்ளத் தவறிய 180 பரீட்சார்த்திகளை பிபிஎஸ்சீ நியமனம் செய்திருந்தது.

(ஆ) 2014 ஒக்தோபர் 23 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்க இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் I(இ) இன் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் செய்முறை பரீட்சை (Practical Exam) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு முரணாக எழுத்துமூல போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படாமல் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு வாய்மொழித் தேர்வினை அடிப்படையாகக் கொண்டு 2017 நவம்பர் 27 இலும் 2018 மார்ச் மாதத்திலும் 314 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) 2010 ஏப்ரல் 23 ஆம் திகதிய 16/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம், தவணைப் பரீட்சைக்கான வினாத் தாள்கள் பாடசாலைகளால் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சுச் சுற்றறிக்கைகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது கிண்ணியா மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயங்களின் அதிபர் சங்கங்கள் மாணவர்களிடமிருந்து ரூபா 4,017,700 தொகையை சேகரித்ததன் மூலம் 2 ஆம் மற்றும் 3 ஆம் தவணைப் பரீட்சை வினாத் தாள்களை தயாரித்திருந்ததுடன் செலவினத்திலும் கூடிய மிகையாக ரூபா 474,593 தொகையை உழைத்திருந்தது.

(ஈ) அசுத்தமான நீரை சுத்திகரித்து சுற்றாடலிற்கு அதனை விடுவிக்கும் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,044,907 கிரயத்தில் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பொறியின் பிரதான வேலையாக காணப்படுகின்ற கயிறு முடிச்சிடுதல் (laying coir) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அசுத்தமான நீர் சுத்திகரிக்கப்படாமல் பொறியூடாக சுற்றாடலிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. ஆகையால், அசுத்தமான நீரால் சுற்றாடல் மாசடைதலை தடுக்கும் நோக்கம் இந்த பொறியால் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது.

(உ) பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறைகளை கருத்தில் கொள்ளாமல் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக கிண்ணியா மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகங்களில் ஐஎஸ்ஏ (ISAs)

மற்றும் ஏடிஈ (ADEs) ஆக அறுபத்து மூன்று ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிலையான நியமனமொன்று மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக அளவீடொன்றாக பதிற்கடமை நியமனம் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தீவு முழுவதுமான சேவையிலுள்ள இருபத்து இரண்டு உத்தியோகத்தர்கள் ஆறு மாதங்களிற்கு மேலாக அத்தகைய வெற்றிடங்களை மேவுகை செய்வதற்காக பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக பெறுமதியிட்டிருந்த போதிலும் காத்தான்குடி நகர சபையானது 04 ஆண்டுகள் காலப்பகுதிக்காக ரூபா 5,000 மாதாந்த வாடகையில் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு இக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கியிருந்தது. இதன் விளைவாக, சபையானது ரூபா 4,755,000 வாடகை வருமானத்தை இழந்திருந்தது.

**4.7 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வங்கி நிதியிடப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண வீதிகளை நிர்மாணிப்பதற்கான இழப்பீடாக ரூபா 87,422,148 தொகையை தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு பொறுப்பாக கிழக்கு மாகாண சபை உள்ளது. மேலும், செயற்திட்ட காலப்பகுதியின் போது விடயங்கள் தீர்க்கப்படாமல் பிணக்குத்தீர்த்தல் செயன்முறைக்காக சில சட்டத்தரணிகளிற்கு சட்டக் கட்டணங்களை செலுத்துவதற்காக மாகாண நிதியங்களிலிருந்து ரூபா 6,680,171 மேலதிக தொகையை மாகாண சபை செலவிட்டிருந்தது.

(ஆ) அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம், மாகாண சபையில் சபைத் தவிசாளர் மற்றும் எதிரணித் தவிசாளர் பதவிகளிற்காக

எந்த ஏற்பாடுகளும் காணப்படவில்லை. எவ்வாறாயினும், சபையானது அத்தகைய பதவிகளை உருவாக்கி மீளாய்வாண்டிற்காக ரூபா 1,172,525 கூட்டுமொத்தமான படிகளைச் செலுத்தியிருந்தது.

(இ) மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கருவப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயத்தில் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிடம், இரண்டு மாடி ஆய்வுகூடம் மற்றும் நூலகக் கட்டிடம் என்பவற்றின் நிர்மாணம் தொடர்பாக ஒப்பந்ததாரரால் ஆற்றப்பட்டிருக்காத வேலைகளிற்காக ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 4,201,942 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.8 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி அதிகாரசபைகள் சார்பாக மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகள் உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அனுப்பிவைக்கப்படாது 08 ஆண்டுகளுக்கு மேலாக வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக ரூபா 12 மில்லியன் தொடக்கம் ரூபா 62 மில்லியன் வரையான வீச்சிலான நிதிகள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வங்கிக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 09 செலவினத் தலைப்புக்களின் 24 மூலதனச் செலவு விடயங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளினூடாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 38,231,216 கூட்டுமொத்தமான தேறிய ஏற்பாடுகள் முழுவதும் மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் செலவிடப்படாதிருந்தன.

## 4.9 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காத்தான்குடிக்கும் கொக்கட்டிச்சோலைக்கும் இடையே போக்குவரத்து சேவைக்கு பயன்படுத்துவதற்காக ரூபா 323,550 கிரயத்தை செலவிட்டு கிண்ணியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்பட்ட படகொன்று 2012 ஆம் ஆண்டில் காத்தான்குடிக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இப் படகை திருத்தம் செய்வதற்காக ரூபா 489,500 தொகையை காத்தான்குடி பிரதேச

செயலகம் செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூன் 30 வரை இது விளைவற்றிருந்தது.

(ஆ) கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது பஸ் தரிப்பிடங்களிற்கான தனியார் பஸ்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதற்காக ரூபா 1,142,000 கிரயத்தில் 2015 யூன் 08 இல் ஜென்ரல் பக்கற் றேடியோ சேவிஸ் (General Packet Radio Service) (GPRS) முறைமை மற்றும் 2000 ரிக்கற் சுருள்கள் என்பவற்றுடன் இணைக்கப்பட்ட 13 விற்பனை தளங்களை (Point of Sales) **(**பிஓஎஸ்) கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், இயந்திரங்களை செயற்படுத்துவதற்காக முறையான மென்பொருள் முறைமை காணப்படாததன் காரணமாக இப் பொருட்கள் உரிய நோக்கங்களிற்காக 03 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்தது.

(இ) திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான 299 வியாபார கடைகளில் 90 கடைகள் வாடகைக்கு விடப்படாது 2011 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தன. இதன் விளைவாக ஏறத்தாழ ரூபா 2,000,000 வருமானத்தை சபை இழந்திருந்தது.

(ஈ) சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் 2018 சனவரி 12 ஆம் திகதிய 01/08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தின் பயன்படுத்தப்படாத வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகத்தில் வைத்திருக்கப்படக்கூடாத போதிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 15 வாகனங்கள் திருகோணமலை பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவின் வளாகத்தில் 02 மாதங்கள் தொடக்கம் 84 மாதங்கள் வரையான காலவீச்சில் அவற்றை திருத்துவதற்கோ அல்லது ஏலமிடுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காணப்படுகின்றன.

(உ) நிந்தவூர் மற்றும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளில் நாள்பட்ட சிறுநீரக பாதிப்பிற்குள்ளான (Chronic Kidney Disease) (சீகேடி) நோயாளர்கள் பற்றாக்குறை காரணமாக இரத்த சுத்திகரிப்பு பிரிவுகள் (Dialysis Units) காணப்படவில்லை. எவ்வாறாயினும், மாகாண சுகாதாரத் திணைக்களம் அவ் வைத்தியசாலைகளிற்காக ரூபா 18,555,000 கிரயத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைக்கான (dialysis treatment) உபகரணத்தையும் ரூபா 6,147,426 தொகையான மருந்துகளையும் தேவைகளை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்திருந்தது இதன் விளைவாக அவ் உபகரணம் 2017 மார்ச் 22 தொடக்கம் இன்று வரை விளைவற்றிருந்தது.

மேலும், பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளிற்கு ரூபா 4,899,000 கிரயத்தில் வழங்கப்பட்ட 02 ஊடுகதிர் (x-ray) இயந்திரங்கள் பொருத்தமான தொழில்நுட்பவியலாளர்கள் காணப்படாததனால் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன.

(ஊ) ரூபா 1,859,500 கிரயத்தில் திருகோணமலை நகர சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நானூற்று இருபத்து நான்கு திண்மக் கழிவு அகற்றல் கொள்கலன்கள் உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாமல் 01 ஆண்டு தொடக்கம் 02 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன. இது தொடர்பாக 182 கொள்கலன்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன என்றும் மிகுதி 242 கொள்கலன்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றும் பிரதம செயலாளர் அறிவித்திருந்தார்.

(எ) திருகோணமலை நகர சபையின் வீரநகர் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளிலிருந்து அகற்றப்படுகின்ற அபாயகரமான கழிவுகளை எரிக்கும் நோக்கில் சுத்திகரிப்பான் (Incinerator) ஒன்றை நிறுவுதல் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 4,230,155 தொகையாகும். எவ்வாறாயினும், இச் சுத்திகரிப்பானை செயற்படுத்துவதற்கு மின்சாரம் பெறப்படாததன் காரணமாக தற்போது இது விளைவற்றிருந்தது. இதன் விளைவாக, திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா பிரதேசத்தின் திறந்த காணியில் அபாயகரமான வைத்தியசாலைக் கழிவுகள் அகற்றப்பட்டுவருகின்றன.

(ஏ) கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் செயற்படாததன் காரணமாக பணியகத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 3.542,364 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் மற்றும் உபகரணங்கள் 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன.

(ஐ) 92 மாணவர்களை மாத்திரம் கொண்டுள்ள கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலை ஒன்றின் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு அறுபத்து நான்கு கணனிகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக உப பாகங்களுடனான 32 கணனிகள் 2014 நவம்பர் 13 இலிருந்து உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன.

(ஒ) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் காரைதீவிலுள்ள பாடசாலையொன்றிற்கு 2007 ஆகஸ்ட் 24 இல் அரசசார்பற்ற நிறுவனமொன்றால் (என்ஜீஓ) நிர்மாணிக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட இரண்டு மாடி ஆசிரியர் விடுதிகள் நிர்மாணித்த திகதியிலிருந்து உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன.

(ஓ) கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள இரண்டு பாடசாலைகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட இருபத்து நான்கு கணனிகளும் உபபாகங்களும் மற்றும் 10 கணனி கதிரைகள் என்பன 07 ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தன.

(ஔ) 2015 ஆம் ஆண்டில் மூதூரிலுள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்காக அதன் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காக ரூபா 9,539,091 கிரயத்தில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இக் கட்டிடம் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் இன்று வரை விளைவற்றிருந்தது.

**4.10 ஒப்பந்த நிர்வாகம்**
-------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏறாவூர் நகர சபைக்கான இரண்டு மாடி அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் தொகையை வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் (நெல்சிப்) வழங்கியிருந்த போதிலும் இக் கட்டிடத்திற்காக நெல்சிப்பால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மூல வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு என்பன சபையால் நிராகரிக்கப்பட்டு ரூபா 110 மில்லியன் மொத்தக் கிரயத்தில் மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக வேறொரு வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நெல்சிப்பால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிகள் முழுவதும் தரைத் தளத்தை நிர்மாணிப்பதற்காக தனியான ஒப்பந்தமொன்றை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

(i) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சானது இந் நிர்மாணத்திற்காக ரூபா 70 மில்லியன் தொகையை வழங்குவதற்கு இணங்கியிருந்ததுடன் 2013 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 35 மில்லியன் மொத்தத் தொகையை விடுவித்திருந்தது. எவ்வாறாயினும்,

சபையானது அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதை தவிர்ப்பதற்காக ஒரு ஒப்பந்ததாரருக்கு வழங்காமல் ஒவ்வொரு தடவையும் மூன்று தனித்தனியான மதிப்பீடுகளை தயாரித்து மூன்று ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கியிருந்தது.

(ii) இக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் மேலும் ரூபா 21 மில்லியன் தொகையை மேற்படி அமைச்சு விடுவித்திருந்தது. சபையானது இந் நோக்கத்திற்காக இன்னொரு மதிப்பீடு மற்றும் பீஓகியூ (BOQ) என்பவற்றைத் தயாரித்திருந்ததுடன் பெறுகை நடைமுறையை பின்பற்றாமல் ஒப்பந்ததாரரொருவரை தெரிவுசெய்திருந்தது. எவ்வாறாயினும், 2017 ஆகஸ்ட் 19 இல் உரிய நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் எந்தவொரு தனியான தொகையையும் 2017 செப்தெம்பர் 13 வரை கோரியிருக்கவில்லை.

(iii) இக் கட்டிடத்தின் 1,683 சதுர மீற்றர் மொத்த தளப்பரப்பிற்காக இன்றுவரை ரூபா 89,465,726 மொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் முழுவதையும் பூர்த்தி செய்வதற்காக சபையானது இண்னொரு ஒப்பந்தத்தை வழங்க வேண்டியிருந்தது.

(iv) நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாததன் காரணமாக இக் கட்டிடம் அங்கீகரிக்கப்படாத கட்டிடமாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக, இது தொடர்பாக உரிய அதிகாரசபைகள் சட்ட நடவடிக்கை எடுக்கும் போது சபை தண்டப்பணம் செலுத்த வேண்டியிருக்கும். இந் நிர்மாண வேலைகளின் மேற்பார்வைக்காகவும் விலைப் பட்டியல்ளை சான்றுறுதிப்படுத்துவதற்காகவும் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக உள்ள போதிலும் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட பொறியியலாளரொருவரிற்கு முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரின் அறிவுறுத்தலுடன் இந் நோக்கத்திற்காக பணிப்பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 மார்ச் 15 இல் வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவை – 2006 இன் பிற்சேர்க்கை – 33 இன் பிரகாரம் அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 250.8 மில்லியன் மொத்தக் கிரயத்தில் வரோதயநகர் பிரதம செயலாளர் செயலகத்தின் வளாகத்தில் சபை செயலகத்திற்காக நான்கு மாடி அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாண சபை வழங்கியிருந்தது.

(இ) ரூபா 18 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட ஏறாவூரிலுள்ள பாடசாலையொன்றின் தொழில்நுட்ப மற்றும் மதியுரை பிரிவிற்கான (technical and counselling unit) மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணமானது இக் கட்டிடத்தின் இட அமைவு வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) வீதியின் மத்திய கோட்டிலிருந்து 12 மீற்றர்களிற்குள்ளேயும் ஏறாவூர் நகர சபை வீதியின் மத்திய கோட்டிலிருந்து 4.9 மீற்றர்களிற்குள்ளேயும் வருகின்றதன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகார சபை (யூடிஏ) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக மேற்படி அதிகாரசபைகளிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக இக் கட்டிடம் அங்கீகரிக்கப்படாத கட்டிடமாக கருதப்படுவதுடன் இது தொடர்பில் உரிய அதிகாரசபைகள் சட்ட நடவடிக்கை எடுக்கும் போது மாகாண சபையானது தண்டப்பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

(ஈ) ரூபா 149,880,000 மொத்தக் கிரயத்துடன் மாகாண சபை செயலகத்தின் நிர்மாண வேலைகளானது வழங்கப்பட்ட கால நீடிப்பின பிரகாரம் 2016 மே 30 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இக் காலப்பகுதியினுள் ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தார். எவ்வாறாயினும், நிர்மாணத்திலுள்ள தாமதங்கள் காரணமாக 2016 நவம்பர் 04 இல் அல்லது அதற்கு முன்னர் ரூபா 2,808,000 தொகையான செயலாற்றல் முறியை காசாக்குவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், வேலைகளை பூர்த்தி செய்வதிலுள்ள 93 நாட்கள் கால தாமதத்திற்காக ரூபா 1,305,491 தொகையான தாமதக் கட்டணங்கள் (எல்டி) அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 66 மாணவர்களின் பயன்பாட்டிற்காக கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள தொழில்நுட்பவியல் பீடக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 23.6 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தமொன்றை மாகாண கல்வி அமைச்சு வழங்கியிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் 2018

மார்ச் 23 வரையிலும் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தார். இதன் விளைவாக தொழில்நுட்பவியல் பீட மாணவர்கள் 66 கட்டாய செய்முறைப் பயிற்சிகளில் 10 கற்கை செய்முறைகளை மாத்திரம் பூர்த்தி செய்திருந்தனர். இதன் விளைவாக மேற்படி தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வழங்கப்பட்ட 01 திசு வளர்ப்பு றாக்கை (Tissue Culture Rack), 04 நோய்த்தடுப்பு ஊசி (Inoculating Needle), 01 செரி பீட் ஸ்ரெரிலைசர் (Seri Bead Sterilizer) மற்றும் 01 வடித்தல் அலகு (Distillation Unit) போன்ற உபகரணங்கள் மாணவர்களால் பயன்படுத்தப்படாமல் பாடசாலையில் விளைவற்றிருந்தன.

(ஊ) கால்வாயில் தண்ணீரை தடுப்பதன் சுற்றாடல் தாக்கங்களை கருத்தில் கொள்ளாமலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமலும் பாடசாலையின் பெயரில் கால்வாய் ஒன்றிற்காக போலியாக தயாரிக்கப்பட்ட உரித்துறுதியை அடிப்படையாகக் கொண்டு 459 ஆரம்பக் கல்வி மாணவர்களிற்கு இடவசதியளிப்பதற்காக மட்டக்களப்பு மத்திய வலயத்தின் காத்தான்குடியிலுள்ள பாடசாலையொன்றில் கால்வாய்க்கு குறுக்காக ரூபா 11,145,438 கிரயத்தில் இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக கால்வாயில் நீரோட்டம் தடைப்பட்டு தேங்கியிருந்ததுடன் இது நுளம்புகளிற்கான இனப்பெருக்க இடமொன்றாக மாறியிருந்தது.

(எ) ஏறாவூர் நகர சபைக்காக ரூபா 193 மில்லியன் மொத்தக் கிரயததில் மூன்று மாடி சந்தை தொகுதியை நிர்மாணிப்பதற்கான நிதியை வழங்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு இணங்கியிருந்ததுடன் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரூபா 99,939,468 ஒப்பந்தப் பெறுமதியில் இச் சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றைச் செய்திருந்தார். ரூபா 22.28 மில்லியன் மொத்த குத்தகைக் கொடுப்பனவொன்றிற்காக ஏறாவூரிலுள்ள இரண்டு மசூதிகளிடமிருந்து 33 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் சபையால் பெறப்பட்ட காணியில் இத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், ஏறாவூர் நகர சபையானது இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற காணியின் உரிமையாளரென குறிப்பிட்டு இந் நிர்மாணத்திற்காக மேற்படி அமைச்சிடமிருந்து சபை நிதிகளைப் பெற்றிருந்தது.

(ஏ) சபைக்கு சட்ட ரீதியாக சொந்தமற்ற காணியொன்றில் ஏறாவூர் நகர சபைக்காக நூலகக் கட்டிடத் தொகுதியுடன் கலாச்சார மண்டபமொன்றை

நிர்மாணிப்பதற்கான வடிவமைப்பொன்றை மாகாண கட்டிடங்கள் திணைக்களம் தயாரித்திருந்தது. எவ்வாறாயினும், சபையானது இவ் வடிவமைப்பை நிராகரித்திருந்ததுடன் ரூபா 117 மில்லியன் மொத்தக் கிரயத்தில் வேறொரு வடிவமைப்பைத் தயாரித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மேற்படி வேலைக்காக நிதியளிப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் குறித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு கட்டிடம் முழுவதற்குமாக தனியொரு மதிப்பீட்டை தயாரிப்பதற்கு சபை தவறியிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் தொகையை மேற்படி அமைச்சு விடுவித்திருந்த போதிலும் இக் கட்டிடத்தின் தரைத் தளத்தின் ஒரு பகுதியை நிர்மாணிப்பதற்காக தனியான ஒப்பதமொன்றை வழங்குவதற்கு இத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) தரைத் தளம் 2017 செப்தெம்பர் 04 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் பீஓகியூ, அளவீட்டுத் தாள் மற்றும் வேலை நிறைவேற்று அறிக்கை போன்ற போலி ஆவணங்களை சபை தயாரித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இற்கு முன்னர் வேலை முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென குறிப்பிட்டு மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் பொறியியலாளரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்ததாரர் உள்ளபடியாக 400.42 கியூபிக் மீற்றர் மணலை வழங்கி நிலத்தை நிரப்பியிருந்த போதிலும் 988.80 கியூபிக் மீற்றர் மணலை வழங்கி நிலத்தை நிரப்பியதற்காக ஒப்பந்ததாரருக்கு சபை கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. இதன் விளைவாக ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,176,760 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்ததாரர் 66.04 கியூபிக் மீற்றர் தடிப்பான தளத்தை இட்டிருந்த போதிலும் 93.75 கியூபிக் மீற்றர் தடிப்பான தளத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 387,980 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இந்த நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஐ) கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி திணைக்களம் ரூபா 4,756,024 ஒப்பந்தப் பெறுமதியில் 2017 ஆம் ஆண்டில் லிங்கநகர் வீதி நிர்மாணத்திற்காக ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ் வகையான நிர்மாண வேலைகளிற்காக தேசிய போட்டிக் கேள்வி கோரல் அல்லது வரையறுக்கப்பட்ட தேசிய போட்டிக் கேள்வி கோரல் பெறுகை முறை பின்பற்றப்படக்கூடாத போதிலும் திணைக்களமானது இப் பெறுகைக்காக கடை முறையைப் பின்பற்றியிருந்தது. இதன் விளைவாக மிகக் குறைவாக யதார்த்தமாக பதிலளித்த கேள்வியாளரை மதிப்பிடுவதற்குப் பதிலாக யதார்த்தமாக பதிலளித்த ஒரு கேள்வியாளரை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு மேற்படி ஒப்பந்தத்தை திணைக்களம் வழங்க வேண்டியிருந்தது.

(ii) அளவீட்டுப் பட்டியலின் (பீஓகியூ) 1.4 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 3,267,641 பெறுமதியான 130 மிமீ கொங்கிறீட் அடுக்கு ஒப்பந்ததாரரால் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் சராசரியாக 101.5 மிமீ கொங்கிறீட் அடுக்கு பிரதான துளையிடுதல் பரீட்சிப்பின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக திணைக்களம் ரூபா 614,498 தொகையை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தியிருந்தது.

(iii) பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம், மேற்படி வீதி நிர்மாணம் ரூபா 102,065 பெறுமதியில் பீஓகியூ இன் 02 ஆம் விடய இலக்கத்தை தவிர்த்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரரால் ஆற்றப்படாத வேலைகள் மீதான ஏதாவது நட்டங்களை மேவுகை செய்வதற்காக ரூபா 217,140 தொகையான செயலாற்றல் முறியை காசாக்குவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஒ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் பெறுகைக் குழு (பிசீ) உருவாக்கப்பட்ட உடனேயே

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (ரீஈசீ) உருவாக்கப்பட வேண்டியதுடன் பிசீ இற்கு கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கு ரீஈசீ உதவி செய்ய வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 4,162,808 பெறுமதியான நூல் மற்றும் சாயத்தை கொள்வனவு செய்வதற்காக கிராமிய கைத்தொழில் திணைக்களத்தால் ரீஈசீ உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) வீதி அபிவிருத்தி திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 219,937,500 ஒப்பந்தப் பெறுமதியில் அமரவயல் தென்னாமாவரடி வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இறுதி விலைப்பட்டியலின் பிரகாரம், ரூபா 39,142,740 பெறுமதியான 150 மிமீ ஏபீசி அடுக்கு (6,523.79 கியூபிக் மீற்றர் ஏபீசி) மற்றும் ரூபா 4,500,000 பெறுமதியான 150 மிமீ கொங்கிறீட் அடுக்கு என்பன ஒப்பந்ததாரரால் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் ஏறத்தாழ முறையே 93.33 மிமீ ஏபீசி அடுக்கு (3,461.58 கியூபிக் மீற்றர் ஏபீசி) மற்றும் 118.75 மிமீ கொங்கிறீட் அடுக்கு என்பன பிரதான துளையிடல் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, திணைக்களம் ரூபா 19,149,240 தொகையை ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாகச் செலுத்தியிருந்தது.

(ii) மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அமரவயல் தென்னாமாவரடி வீதியில் 50 மில்லிமீற்றர் அஸ்பால்ற் கொங்கிறீட் அடுக்கை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரரொருவருக்கு ரூபா 73,059,981 தொகையை செலுத்தியிருந்த போதிலும் 41.67 மில்லிமீற்றர் அடுக்கு மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டமையால் ரூபா 64,611,197 தொகை ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இதன் விளைவாக இது தொடர்பாக ரூபா 8,448,784 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) ரூபா 10,405,053 ஒப்பந்தப் பெறுமதியில் 2017 இல் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் மஹாஓயாவில் மாவட்ட விவசாய விரிவாக்கல் விநியொக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்ததாரரொருவருக்கு கட்டிடங்கள் திணைக்களம் ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. கொடுப்பனவு விலைப் பட்டியல்களின் பிரகாரம் 1,749.872 கிலோகிராமான 10 மிமீ கற்பாறை உருக்குச் சட்டகத்திற்காக (tor steel bar) ஒப்பந்ததாரருக்கு ரூபா 402,470

தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் 1,629.979 கிலோகிராம் கற்பாறை உருக்குச் சட்டகங்களை மாத்திரமே பயன்படுத்தியிருந்தார். ஆகையால் திணைக்களம் ரூபா 27,575 தொகையை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தியிருந்தது.

## 4.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பாடசாலை பதவியணியினர்

(i) கிழக்கு மாகாணத்தினுள் கல்முனை, சம்மாந்துறை, மட்டக்களப்பு மற்றும் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகங்களில் 518 ஆசிரியர்கள் மிகையாக காணப்பட்ட அதேநேரம் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, கல்குடா, கிண்ணியா, மூதூர் மற்றும் திருகோணமலை வலயக் கல்வி அலுவலகங்களில் 1394 வெற்றிடங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும் மாகாணத்தினுள் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை முன்வைப்பதற்கான முறையான இடமாற்றத் திட்டமொன்றை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கல்வி அமைச்சின் 1998 யூலை 06 ஆம் திகதிய 1998/23 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம், தகுதிவாய்ந்த அதிபர்கள் நியமிக்கப்படும் வரை பதிற்கடமை அதிபர்கள் நியமிக்கப்படலாம். எவ்வாறாயினும், அதிபர் சேவைக்காக 215 உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டதை கருத்தில் கொள்ளாமல் கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 255 ஆசிரியர்கள் பதிற்கடமை அதிபர்களாக வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) கல்வி அமைச்சின் 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், குறித்த பாடசாலையொன்றில் 08 ஆண்டுகளிற்கு மேலாக சேவையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிற்கு இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 523 ஆசிரியர்கள், 24 அதிபர்கள் 2018 ஏப்ரல் 15 வரையிலும் பொருத்தமான பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்யப்படாமல் 10 ஆண்டுகள் தொடக்கம் 18

ஆண்டுகள் வரையான காலவீச்சில் ஒரே பாடசாலையிலேயே காணப்பட்டனர்.

(iv) மாகாண கல்விப் பணிப்பாளர் 03 மாதங்களிற்கு தற்காலிக அடிப்படையில் தேசிய பாடசாலைகளிலிருந்து மாகாண பாடசாலைகளிற்கும் அதேபோல் மாகாண பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளிற்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய முடிந்திருந்த போதிலும் தேசிய பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்ட 22 ஆசிரியர்கள் மற்றும் மாகாண பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்ட 06 ஆசிரியர்கள் 02 அண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக முறையே மாகாண பாடசாலைகள் மற்றும் மத்திய பாடசாலைகளில் வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(v) கல்முனை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்த இருபத்து ஒன்பது ஆரம்பத்தர ஆசிரியர்கள் கல்முனை வலயத்திலுள்ள 98 ஆரம்பத்தர ஆசிரியர்களிற்கான பற்றாக்குறைகளை கருத்தில் கொள்ளாமல் இரண்டாம் மட்டத்திற்காக கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(vi) கல்முனை மற்றும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயங்களில் விசேட கல்வி பாடநெறிகளை கற்பிப்பதற்காக பயிற்சி பெற்றிருந்த பதினொரு ஆசிரியர்கள் கல்முனை கல்வி வலயத்தில் 19 விசேட கல்வி ஆசிரியர்களிற்கான பற்றாக்குறைகள் காணப்பட்ட போதிலும் உரிய பாடசாலைகளில் அவர்கள் வேலையிலீடுபடுத்தப்படாமல் விசேடமல்லாத கல்வியில் வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) சுகாதாரத் துறைப் பதவியணியினர்**

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்முனை மற்றும் திருகோணமலை பிராந்தியத்தில் மிகையாகவுள்ள தாதிய உத்தியோகத்தர்களினதும் பொதுச் சுகாதார மருத்துவச்சிகளினதும் (midwife) எண்ணிக்கை முறையே 32 மற்றும் 23 ஆக இருந்த அதே நேரம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிராந்தியத்தில் தாதிய உத்தியோகத்தர்களினதும் பொதுச் சுகாதார மருத்துவச்சிகளினதும் பற்றாக்குறைகள் முறையே 08 மற்றும் 31 ஆக இருந்தன. எனினும், மட்டக்களப்பு பிராந்தியத்தில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மிகையாகவுள்ள பதவியணியினரை இடம்மாற்றுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சை வைத்தியர், தாதிய உத்தியோகத்தர்கள், உதவியாளர் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவச்சி போன்ற உத்தியோகத்தர்களிற்காக 10 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களிற்கு 03 உத்தியோகத்தர்கள் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மாகாண நிதி ஒழுங்குவிதி (பிஎவ்ஆர்) 258(3) இன் பிரகாரம் மாகாண சபை நிதியத்தின் நிதியாண்டு ஒன்றிற்கான நிதிக்கூற்றுக்கள் அடுத்து வரும் ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாகாண சபை நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 30 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 மே 01 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஏப்ரல் 18 இல் உள்ளவாறான மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| | கணக்கின் வகை | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 2018 ஏப்ரல் 18 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 32 | 02 |
| (ii) | வருமானக் கணக்கு | 01 | 01 | - |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான | 34 | 32 | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முற்பணக் கணக்குகள் | | | |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 01 | 05 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 03 | 01 | 02 |
| | | ----- | ----- | ----- |
| | **மொத்தம்** | **80** | **68** | **12** |
| | | === | === | === |

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாண சபையின் முன்பள்ளி கல்விப் பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2010 இன் 1 ஆம் இலக்க கிழக்கு மாகாண முன்பள்ளி கல்விப் பணியக நியதிச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 யூன் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் பதினைந்து மாத தாமதத்தின் பின்னர் 2018 யூன் 07 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கக்கூடியதாக ஆளுநர் விஞ்ஞாபனத்தை (Governor's Memorandum) திருத்தத் தவறியதன் விளைவாக 2013 – 2017 வரையான ஆண்டுகளிற்கான கிழக்கு மாகாண ஆளுநர் நம்பிக்கை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மாகாண நிதி ஒழுங்குவிதி 258.3 இன் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2018 சனவரி 08 ஆம் திகதிய பிரீ/01/2018 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2018 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும் மாகாண கல்வித் திணைக்களம் ஒதுக்கீட்டுக் கணக்குகளை இரண்டு மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2018 யூன் 04 ஆம் திகதியிலேயே கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திருந்தது.

## 5.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முயற்சி செய்யும் அனைத்து அரச நிறுவனங்களும் அடையப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைவதிலுள்ள இடைவெளிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை அளவிடுவதற்குப் பொருத்தமான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டுகொள்ள வேண்டும். எவ்வாறாயினும், கிழக்கு மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற 34 மாகாண நிறுவனங்கள் மீளாய்வாண்டின்

போது உரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருக்கவில்லை. மேலும், 2030 அளவில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக அந் நிறுவனங்களால் பெறப்பட்ட அறிவுத்திறன் மட்டம் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**5.4 சுற்றாடல் பாதுகாப்பு**

1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிரப்பு நிலையங்கள், சீமெந்து உற்பத்திக் கைத்தொழில், தச்சுவேலை கடைகள், வாகன திருத்துமிடங்கள் மற்றும் அரிசி ஆலைகள் போன்ற கைத்தொழில்களால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டிய போதிலும் திருகோணமலை நகர சபையானது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய 109 கைத்தொழில்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தது.

**5.5 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மாகாண சபையின் கீழ் செயற்படுகின்ற இரண்டு மாகாண அமைச்சுக்கள், ஒன்பது மாகாண திணைக்களங்கள் மற்றும் மூன்று நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பன மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்திருக்கவில்லை.

**5.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 10 மாகாண திணைக்களங்கள் மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

**5.7 பெறுகைத் திட்டம்**

மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற எட்டு திணைக்களங்களும் மூன்று நியதிச்சட்ட நிறுவனங்களும் 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

## 5.8 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திணைக்களம் 34 நிறுவனங்களில் 429 கணக்காய்வு பரீட்சிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் ரூபா 20,237,323 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 278 கணக்காய்வுப் பரீட்சிப்புக்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் திணைக்களமானது கிழக்கு மாகாண சபையின் 18 நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளத் தவறியிருந்தது.

## 5.9 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்த்து வைக்கப்படாத விடயங்கள்

(அ) கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண மற்றும் மத்திய அரசாங்க நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல் மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக உள்ளது. எனினும், அலுவலக கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திடமிருந்து 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஆலோசனைக் கட்டணங்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 6.3 மில்லியன் தொகை மாகாணத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவைகள் மற்றும் பணிப்பாளர், கட்டிடங்கள் திணைக்களம் ஆகியோர் உள்ளடங்கலாக கிழக்கு மாகாண சபையின் இருபத்தொரு உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. பின்னர், இவ் வகையான ஆலோசனை வேலைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தில் விசேட நிபுணர்கள் இல்லாமையின் காரணமாக கட்டடிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை மட்டகளப்பு மாவட்ட செயலகம் முடிவுறுத்தியிருந்ததால் அலுவலக கட்டிட நிர்மாணமானது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தாமதமடைந்திருந்தன.

(ஆ) கிண்ணியா பிரதேச சபையில் 2013 ஆம் நிதியாண்டு தொடர்பாக ரூபா 2,106,258 பெறுமதியான அறுபத்து எட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் 2014 ஆம் நிதியாண்டு தொடர்பாக ரூபா 3,253,657 பெறுமதியான நாற்பத்து நான்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் காணாமல் போயிருந்தன. எனினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினூடாக மாகாண திறைசேரிக்கு செலுத்தப்பட்ட

உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போனமையை தெரிவிப்பதற்கு இவ் அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபையானது போதிய பிணைகளைப் பெற்றுக்கொள்ளாமல் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது மாகாண சபையின் அங்கத்தவர்களுக்கு ரூபா 4,600,000 கூட்டு மொத்தமான கடன்களை வழங்கியிருந்ததுடன் 2018 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு அவர்களிடமிருந்து ரூபா 1,219,157 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் கடன்களை அறவிடுவதற்காக அவற்றின் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாாகண சபையின் முன்னாள் அங்கத்தவர்கள் 2008 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது 37 மடிக் கணனிகளையும் 37 பக்ஸ் இயந்திரங்களையும் பெற்றிருந்ததுடன் அவற்றில் 12 மடிக் கணனிகளும் 12 பக்ஸ் இயந்திரங்களும் 2012 யூன் 27 ஆந் திகதி மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மாகாண சபைக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் ரூபா 4,524,250 பெறுமதியான மிகுதி 25 மடிக் கணனிகளும் 25 பக்ஸ் இயந்திரங்களும் 2018 யூன் 30 வரையிலும் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பில் 2018 யூன் 30 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வேலையற்ற இளைஞர்களுக்கு கொரிய மொழி வகுப்புக்களை நடாத்துவதற்கு முதலமைச்சரின் முன்னாள் செயலாளருக்கு 2008 ஆம் ஆண்டின் போது முற்பணமாக ரூபா 2,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட வகுப்புக்கள் திட்டமிடப்பட்டவாறு நடாத்தப்பட்டிருக்காததுடன் செலுத்தப்பட்ட முற்பணம் 2018 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தம்பலகாமம் பிரதேச சபையானது வீதவரிகளை சேகரிக்கும் வகையில் வருமான சேகரிப்பு உத்தியோத்தர்களுக்கு பற்றுச்சீட்டு புத்தகங்களை வழங்கியிருந்த போதிலும் ஒன்பது பற்றுச்சீட்டு புத்தகங்கள் தொடர்பாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது அந்த உத்தியோத்தர்களால் சேகரிக்கப்பட்ட பணம் சபைக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர், ஒன்பது பற்றுச்சீட்டு புத்தகங்களில் இரண்டு பற்றுச்சீட்டு புத்தகங்கள் தொடர்பான ரூபா 160,900 தொகை மாத்திரம் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களால் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தன. எனினும், மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக சபை ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் மாகாண சபையின் பிரதம செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளத் தவறியமை |
| (ஆ) | சொத்துக்களின் பயன்பாடு | (i) பொருள் மெய்மையாய்வுகளை உரிய நேரத்திற்குச் செய்யத் தவறுதல் மற்றும் பொருள் மெய்மையாய்வுச் சபைகளால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறுதல். |
| | | (ii) விளைவற்ற சொத்துக்களை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருமான நிர்வாகம் | முத்திரைத் தீர்வைகள் மற்றும் வீதவரிகளின் நிலுவைகளை அறவீடு செய்யும் பயனுள்ள நடவடிக்கைகள் தேவைப்படுதல். |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | தாமதமின்றி ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான இடமாற்றல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். |